# அன்பும் நட்பும் எங்குள்ளதோ

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றான்

**1**
கிறீஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் நாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே

**2**
சீவிய தேவனுக் கஞ்சிடுவோம்
அவருக்கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரை ஒருவர் நேசிப்போம்

**3**
எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே

**4**
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறீஸ்துநாதர் இருந்திடுக

**5**
முத்தி அடைந்தோர் கூட்டத்தில்
நாமும் ஒன்றாய் சேர்ந்து மனம்;
மகிழ்ந்து கிறீஸ்து இறைவா நின்
மகிமை வதனம் காண்போமே